# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
# அவசரக் கூட்ட அறிவிப்பு

31.05.2018–ம் தேதி வியாழக்கிழமை மாலை 2.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

## முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,

தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.

## பொருட்கள்

**குறள் :**

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

067. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வுக் கூட்டங்களில் சொத்துவரி கேட்புக்கு ஏற்றவாறு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சியில் 7900 சொத்துவரி கேட்புகள் உள்ள நிலையில் தற்போது வரை 4563 குடிநீர் இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட பொருள் குறித்து நடைபெற்ற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்திலும் கூடுதலாக பெறவேண்டிய குடிநீர் இணைப்புகள் வழங்கப்படவேண்டுமென உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி தெருவில் உள்ள பகிர்மானக் குழாயிலிருந்து வீடு வரை குழாய் பதித்து 1591 எண்ணிக்கை புதிய குடிநீர் இணைப்புகள் (Internal Plumbing of Water Supply House Service Connections) வழங்கிட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.90.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. அனுமதிக்கலாம்.

2. மதிப்பீடு தொகை ரூ.90.00 இலட்சத்தை TUFIDCO நிறுவனம் மூலம் வட்டியில்லா கடனாக பெற்று மேற்கண்ட பணி மேற்கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 080 /2018/இ1, நாள்.30.04.18)

**தீர்மானம்** **(அனுமதிக்கப்பட்டது ).**

068. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் கோடை காலத்தை முன்னிட்டு HDPE டேங்க் வைத்து குடிநீர் வழங்க வேண்டும் என்று நகராட்சி நிர்வாக ஆணையாளர் சுற்றறிக்கை Whats app ல் அனுப்பியதின் அடிப்படையில் நகர்பகுதியில் 5 இடங்களில் டேங்க் அமைக்கப்பட்டது. தற்போது நகராட்சிக்கு சொந்தமான டேங்கர் லாரி பழுதடைந்தநிலையில் பழுது சரிச்செய்ய பட்டறைக்கு அனுப்பப்பட்டிருந்தது. இதனால் மேற்கண்ட இடங்களில் அமைக்கப்பட்ட டேங்க்கிற்கு குடிநீர் வழங்கமுடியவில்லை. இதனால் தனியார் மூலம் குடிநீர் டேங்கர் மட்டும் வாடகை அடிப்படையில் அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய அனுமதிக்கு. மேலும் குடிநீர் விநியோகம் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 விதி 15ன் கீழ் இப்பணியினை மேற்கொண்டமைக்கும், இதற்காகும் செலவினத்தொகை ரூ.60450 /–க்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 0234/2018/இ1, நாள். )

**தீர்மானம்** **(பதிவு செய்யப்பட்டது ).**

069. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகள் விவரம் வருமாறு.

1. 4 அடி 40 வாட்ஸ் குழல் விளக்குகள் – 868 எண்ணிக்கை

2. 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் – 297 எண்ணிக்கை

3.70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் – 52 எண்ணிக்கை

4.250 வாட்ஸ் மெடல் அலைடு விளக்குகள் – 49 எண்ணிக்கை

5.400 வாட்ஸ் உயர்கோபுர விளக்குகள் – 4 எண்ணிக்கை

6. 85 வாட்ஸ் சி.எப்.எல்.விளக்குகள் – 32 எண்ணிக்கை

7. 36 வாட்ஸ் சி.எப்.எல்.விளக்குகள் – 72 எண்ணிக்கை

**மொத்தம் – 1374 எண்ணிக்கை**

மேற்காணும் தெரு விளக்குகளை பராமரிக்க தேவையான நிரந்தர பணியாளர் போதுமானதாக இல்லை, எனவே அவசரம் மற்றும் அவசியம் கருதி ஒப்பந்த அடிப்படையில் எலக்ட்ரிசியன்–1, எண்ணிக்கை, மின்கம்பியாளர்–1 எண்ணிக்கை, உதவியாளர்–2, எண்ணிக்கைகள் அமர்த்திக்கொண்டு தெருவிளக்குகளை பராமரிக்க வேண்டியுள்ளதால், 01.04.2018ம் தேதி முதல் 30.09.2018ம் தேதி வரை ஆறு மாத காலத்திற்கு பராமரிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,86,000/–க்கு அனுமதிக்கும் தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 விதி 15ன் கீழ் உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணியாளர்களை அமர்த்திக்கொண்டு பணியினை செய்து கொள்ளவும், அதற்கான செலவினத்தொகை வழங்கவும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> – மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண். 0233 /2016/இ1, நாள்.15.05.18 )

**தீர்மானம்** **(அனுமதிக்கப்பட்டது ).**

070. வந்தவாசி நகராட்சியில் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண்.TN25Y 3443 மற்றும் மினிலாரி எண்.TN25Y 5348 வாகனங்கள் தகுதிகாலம் முடிவடைந்துவிட்டதாலும், மேலும் மேற்படி வாகனங்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாலும், கழிவு நீக்கம் செய்ய வேண்டியுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2652/2018/P2, நாள்.16.04.2018ன் படியும் பழுதுள்ள வாகனங்களை கழிவு நீக்கம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி வாகனங்கள் கழிவு நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி வாகனங்கள் கழிவு நீக்கம் செய்ய தானியங்கி பொறியாளர் வேலூர் அவர்களின் சான்று பெற உரிய நடவடிக்கைகள் எடுக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 089/2018/இ1, நாள்.15.05.2018 )

**தீர்மானம்** **(அனுமதிக்கப்பட்டது ).**

071. வந்தவாசி நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிக்காக வார்டுகளிலிருந்து நுண்ணிய உரகுடில் வரை குப்பைகள் எடுத்து செல்ல பேட்டரியால் இயங்கும் வாகனம் 12 எண்கள் உத்தேச செலவினம் ரூ.21,60,000/– செலவினத்தில் கொள்முதல் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி வாகனங்கள் செலவினத்தை அரசு நிதி உதவி பெற்று வாங்கவும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 090/2018/இ1)

**தீர்மானம்** **(பதிவு செய்யப்பட்டது,ஒப்புதல்அளிக்கப்பட்டது ).**

072. வந்தவாசி நகராட்சி அலுவலகத்தில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.S.சீனுவாசன் என்பவரின் மகள் திருமணத்திற்காக முன்பணம் ரூ.10,000/– ம் வழங்கவும், மேற்படி முன்பணத்தினை மாத ஊதியத்தில் ரூ.1000/–பிடித்தம் செய்யவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி திருமணம் முன்பணம் ரூ.10,000/– வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0780/2018/எச்1, நாள்.22.05.18)

தீர்மானம் (அனுமதிக்கப்பட்டது ).

073. வந்தவாசி நகராட்சி அலுவலகத்தில் அலுவலக பயன்பாட்டில் பயன்படுத்திவரும் கணிணிக்கு அச்சுபொறி டோனர்கள் தேவைப்படுவதால் அதனை சப்ளை செய்தமைக்கு தொகை ரூ.1,23,050/– (ஒரு இலட்சத்து இருபத்திமூன்றாயிரத்து ஐம்பது மட்டும்) பட்டியல் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் தொகை வழங்கவும் மன்றம் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கப்படுகிறது.
2. கணினி அச்சுபொறி டோனர்கள் சப்ளை செய்த வகையில் ரூ.123050/–வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.018/2018/எச்1, நாள்.16.04.18)

தீர்மானம் (அனுமதிக்கப்பட்டது ).

074. வந்தவாசி நகராட்சி அலுவலகத்தில் அலுவலக பயன்பாட்டில் பயன்படுத்தி வரும் கணினி பழுது அடைந்துள்ளதால் அதனை பழுது நீக்கம் செய்ய தேவையான உபகரணங்கள் வாங்கி கொள்ளவும், விலைப்புள்ளி கோரவும், மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி கணினி உபகரணங்கள் சப்ளை பெற்றதற்கும், உரிய தொகை ரூ.123050/– வழங்கவும் மன்றம் ஒப்புதல் வழங்குதல்.

(ந.க.எண்.018/2018/எச்1, நாள்.16.04.18)

தீர்மானம் (அனுமதிக்கப்பட்டது ).

அ.கு.தொ.

அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினி பழுது பார்க்க தேவையான உபகரணங்கள் சப்ளை செய்ய வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மூன்று பட்டியல்.

| வ.எண். | விவரம் | 328 Com.Toner | HP 88A comp | Canon go3 | Total |
|---|---|---|---|---|---|
| 1 | Sri Ram System | 3280– | 3150– | 3160– | 9590.00 |
| 2 | Success Computers | 3400– | 3350– | 3300– | 10050.00 |
| 3 | Network computrs | 3650– | 3480– | 3425– | 10555.00 |

அலுவலககுறிப்பு–

குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ரூ.9590/– Sri Ram System என்ற நிறுவனத்திற்கு கணினி உபகரணங்கள் சப்ளை செய்ய ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று உத்திரவு வழங்கவும், ஆணையரின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**075.**வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளை பராமரிக்க தெருவிளக்கு கம்பங்களில் எண்கள் அமைக்கும் பணிக்கு நகராட்சி சட்டம் **1920** பிரிவு **15**ன் கீழ் **18.12.2017** அன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதையும், குறைவான தொகை ரூ.**75.00**க்கு கம்பம் **1**க்கு எண் எழுதித்தர விலைப்புள்ளிதாரர் திரு.அ.அஜீஸ், ஒப்பந்ததாரருக்கு அவசரம் அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியதையும், பணி செய்து முடித்ததற்கு ஒப்பந்ததாரர் திரு.அ.அஜீஸ், என்பவருக்கு பட்டியல் தொகை ரூ.**82950/–** வழங்கியதையும், மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.அ.அஜீஸ், ஒப்பந்ததாரர் விலைப்புள்ளி ரூ.**75** வீதம் **1106** எண்களுக்கு ரூ.**82,950/–** செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். **019 /2018**/இ**1**, நாள்.**24.05.18**)

**தீர்மானம்** **(பதிவு செய்யப்பட்டது ).**

**076.** வந்தவாசி நகராட்சி நகரமைப்பு ஆய்வர் பணி வேண்டி G.K.நடராஜன் (தற்போது நகரமைப்பு ஆய்வர்) என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.**13323/2006**ன் தீர்ப்பை எதிர்த்து W.P.No.**445/2011** மேல்முறையீடு செய்யப்பட்டது. மேற்படி மேல்முறையீட்டு மனுவின் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. SLPNo. **19724/2011** , வழக்கை ஏற்று நடத்தவும், அதற்க்கான கட்டணம் தொகை ரூ.**1,75,000/–** (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் இவ்வழக்கு கட்டணம் வழங்க கோரி மதுரைகிளை உயர்நீதி மன்றத்தில் W.P.No.5154/2018 and Wmp (md) No.**5135/2018** வழக்கு தொடர்ந்துள்ளார். தீர்ப்பாணை பெறப்பட்டநாள்.**21.03.2018.**

அலுவலக குறிப்பு–

அ. மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ.அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். **4299/2018**/பி**1**, நாள்.**24.05.18**)

**தீர்மானம்** **(அனுமதிக்கப்பட்டது ).**

**077.** வந்தவாசி நகராட்சியில் பராமரிக்கப்படும் டேவணி பதிவேட்டை மாநில கணக்காயர் சென்னை அவர்கள் தணிக்கை மேற்கொள்ளப்பட்டதில் காலாவதியாகும் வைப்புத் தொகையை காலாவதியாகும் கேட்புதொகை டேவணி பதிவேட்டில் எடுத்து செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க **1998**ம் ஆண்டு முதல் **2013–2014**ம் ஆண்டு முடிய காலாவதியான டேவணி பதிவேட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

தற்போது திரு.M.பாஷா, ஒப்பந்ததாரர் தான் செலுத்திய டெண்டர் தொகையை திருப்பி வழங்குமாறு தமது மனுவில் கோரியுள்ளார். எனவே காலாவதியான டேவணி பதிவேட்டில் உள்ள தொகையை திரு.M.பாஷா என்பவருக்கு தொகை ரூ.**56000/–** (ஐம்பத்திராயிரம் மட்டும்) வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

அ. மன்றம் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

ஆ.காலாவதியான டேவணி பதிவேட்டில் இருந்து திரு.M.பாஷா என்பவருக்கு ரூ.**56000/–** வழங்க மன்றம் அனுமதிக்கப்படுகிறது.

(ந.க.எண்.**20 /2018**/பி**1**, நாள்.**15.05.18**)

**தீர்மானம்** **(அனுமதிக்கப்பட்டது ).**

**078. தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்க சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளது பற்றிய அறிவிக்கை**

**(ந.க.எண்.394/2018/அ1, நாள். .05.2018)**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 82ன் படி நியாயமான வருடாந்திர வாடகையின் அடிப்படையில், நகராட்சியால் சொத்து வரியானது விதிக்கப்படுகிறது. மேலும், வரிவிதிப்பு விதி 6–A படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டிதலின்படி, சொத்து வரியினை நிர்ணயம் செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள்(இரண்டாம் திருத்தம்) சட்டம் – 2018, (2018 தமிழ்நாடு சட்டம் 6)–ல் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83(1) (சி) க்கு கீழ்க்கண்டவாறு சட்டத் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது. வந்தவாசி நகர மன்ற தீர்மானம் எண். , நாள். .05.2018ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

1. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83(1) (சி)ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு, சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும்,
2. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83(1) (சி)ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்து வரிவிதிக்கவும்,
3. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83(1) (சி) ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும்பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்,
4. கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவிபெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்து வரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்து வரியாக விதிக்கவும்.
5. தமிழ்நாடு மாவட்ட நகராட்கிள் சட்டம் 1920, பிரிவு 83(1) (சி)ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரை ஆண்டிலிருந்து, மேற்படி கடடிடங்களுக்கு சொத்துவரி விதிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>பொருள்</u>**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 82ன் படி நியாயமான வருடாந்திர வாடகையின் அடிப்படையில், நகராசியால் சொத்து வரியானது விதிக்கப்படுகிறது. மேலும், வரிவிதிப்பு விதி 6–A படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டிதலின்படி, சொத்து வரியினை நிர்ணயம் செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள்(இரண்டாம் திருத்தம்) சட்டம் – 2018, (2018 தமிழ்நாடு சட்டம் 6)–ல் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83(1) (சி) க்கு கீழ்க்கண்டவாறு சட்டத் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

**AMENDMENTS TO THE TAMILNADU DISTRICT MUNICIPALITIES ACT, 1920**

**5. In Section 83 of the Tamil Nadu District Municipalities Act, 1920, in Sub-Section (1)**

(1)

(1) for clause (c), the following clause shall be substituted, namely:-

"(c) buildings used for educational purpose including hostels and libraries, run by the Government or Municipality or any other local authority or institutions aided by the Government and buildings used for charitable purpose sheltering the destitute or animals and orphanages, homes and schools for the deaf and dumb, asylum for the aged and fallen women and such similar institutions run purely on philanthropic lines as are approved by the council:

Provided that the buildings used for educational purpose by the Government aided institutions for conducting self-financing courses shall be subject to levy of property tax;":

(2)in the proviso, for the Expression " clauses (a), (c) and (e)" shall be substituted.

மேற்படி சட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் மீது சொத்து வரி விதிக்கப்பட வேண்டும் மற்றும் அரசின் உதவி பெற்று செயல்பட்டு வரும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வருமாயின் அக்கட்டிடங்கள் மீது சொத்து வரி விதிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83(1) (சி)ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு, சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும்,

1. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83(1) (சி)ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்து வரிவிதிக்கவும்,

2. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83(1) (சி) ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும்பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்,
3. கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவிபெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்து வரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்து வரியாக விதிக்கவும்.
4. தமிழ்நாடு மாவட்ட நகராட்கிள் சட்டம் 1920, பிரிவு 83(1) (சி)ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரை ஆண்டிலிருந்து, மேற்படி கடடிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்,
5. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 78(3)ன்படி, ஆட்சேபணைகளை அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் மன்றம் அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து மேற்கண்ட அறிவிக்கை மீது பொதுமக்களிடமிருந்து எவ்வித ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் ஏதும் இதுவரை பெறப்படவில்லை.

எனவே மேற்கண்ட வரைவு அறிவிக்கையினை உறுதி செய்து இறுதி அறிவிக்கை வெளியிடவும் அதனை மாவட்ட அரசிதழில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 78(3)ன்படி மேற்கண்ட முறையில் சொத்துவரி விதிப்பு செய்ய, அறிவிப்பு செய்யப்பட்டதை தொடர்ந்து எவ்வித ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் தெரிவிக்காத நிலையில், சொத்துவரி விதிப்பினை மேற்கொள்வது குறித்து இறுதி செய்யலாம்.
3. மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கு ஆகும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.394/2018/அ1)**

**தீர்மானம்** **(பதிவு செய்யப்பட்டது ).**

079. வந்தவாசி நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கும், பொறியியல் பயன்பாட்டிற்கும் பயன்படுத்திவரும் ஜீப் பழுது ஏற்பட்டுள்ளதை உபகரணங்கள் ஜெயின்கார்ஸ், திருவண்ணாமலை மாற்றி சீர் செய்து கொடுத்த வகையில் பட்டியல் தொகை ரூ.1,26,946/– வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை ஜெயின்கார்ஸ், திருவண்ணாமலை என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி ஜீப் பழுது பார்த்த வகையில் ரூ.1,26,946/– வழங்கிட மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.640/2018, நாள்.28.05.2018)

**தீர்மானம்** **(அனுமதிக்கப்பட்டது ).**

080. திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம் மற்றும் நகரம் வார்டு–சி, பிளாக்–9, நகரபுல எண்.9/1ல் வசிக்கும் திரு.N.கலால் பாஷா மகன் கே.துங்கு அப்துல் ரஹ்மான் என்பவர், அன்னாருக்கு சொந்தமான மேற்படி புல எண்ணில் 026 ச.மீ.இடம், தெரு என நில உரிமை பதிவுகளில் பதிவு செய்திருப்பதை ஆட்சேபித்து, 26 ச.மீ இடத்தை தனக்கு சொந்தமக்கி பட்டா வழங்க, வருவாய் துறையிடம் கோரிக்கை வைத்துள்ளார். அன்னாரது கோரிக்கையை வருவாய் துறை ஆவணங்கள் மற்றும் நடைமுறைகளின்படி பரிசீலித்து, வந்தவாசி வட்டாட்சியர், ந.க.எண்.ஆ3/ /2017 நாள்.07.06.2017–ல் 26 ச.மீ. இடத்திற்குண்டான கிரையத்தொகை வசூலித்துக்கொண்டு பட்டா வழங்கலாம். என மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரைந்துள்ளார். மேலும் வருவாய் கோட்டாட்சியர், செய்யார் அவர்கள் ந.க.எண்.அ4/4622/2017, நாள்.13.04.2018ல் நகராட்சி ஆட்சேபணை இல்லாத தீர்மானம் ஒன்றை இது தொடர்பாக கோரியுள்ளார்கள். பார்வையிடப்பட்டதில் தற்போது போக்குவரத்திற்கு பாதிப்பு இல்லை, ஆகவே வார்டு–C, புலஎண்.9/1–ல் 26 ச.மீட்டர் இடத்திற்கு வருவாய் துறை ஆவணங்கள் மற்றும் நடைமுறைகளின்படி மனுதாரருக்கு பட்டா வழங்க, வந்தவாசி நகராட்சிக்கு யாதொரு ஆட்சேபணையும் இல்லை என தீர்மானம் இயற்ற மன்றப்பொருள் வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:

1.வருவாய்துறை ஆவணங்கள் மற்றும் நடைமுறைகளின் அடிப்படையில் பட்டா வழங்க போக்குவரத்திற்கு பாதிப்பு இல்லை என்பதால் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 469 /2018/ந.அ.ஆ, நாள்.31.05.18)

**தீர்மானம்** **(அனுமதிக்கப்பட்டது ).**

081.வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் கோடை காலத்தை முன்னிட்டு HDPE டேங்க் வைத்து குடிநீர் வழங்க வேண்டும் என்று நகராட்சி நிர்வாக ஆணையாளர் உத்திரவிடப்பட்டுள்ளதால், அவ்வாறே வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சிக்கு சொந்தமான Tanker பழுதடைந்து, பட்டறையில் இருப்பதால், தனியார் Tanker Lorry மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் நகர் பகுதிகளில் பொதுமக்கள் அவசர அவசிய தேவைக்கு கேட்கும் குடிநீரையும், விநியோகம் செய்து வரப்படுகிறது. மேற்படி 01.05.2018 முதல் 31.05.2018 வரை குடிநீர் விநியோகம் தனியார் டேங்கர் லாரி மூலம் சப்ளை செய்த வகையில் செலவினம் ரூ.76050/— ஆகும். மேற்படி செலவினத்தொகை வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 0234/2018/இ1, நாள். 31.05.2018)

**தீர்மானம்** (அனுமதிக்கப்பட்டது ).

**082. தொழில் நிறுவனங்கள் மற்றும் மத்திய / மாநில அரசுப்பணியாளர்களுக்கு ஏற்கனவே உள்ள தொழில்வரி விகிதங்களை தற்போது 01.10.2018 முதல் விதிக்கப்படும் தொழில்வரி விகிதங்களை சீராய்வு மூலம் உயர்வு செய்வதற்கான அறிவிக்கை**

வந்தவாசி நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் மத்திய/மாநில அரசு பணியாளர்களுக்கு 1920—ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1998 பிரிவு 124 (ம) உட்பிரிவு (13)ன் படி மேற்படி சட்ட உட்பிரிவு (2)ன் படி அரசு நிர்ணயித்துள்ள தொழில்வரி விகிதங்களின் படி தற்போது விதிக்கப்படும் தொழில்வரி விகிதங்களை 01.10.2018 முதல் உயர்வு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12503/2018/ஆர்1, நாள்.21.05.2018ன் படி 01.10.2018 முதல் 25 சதவீதம் ஏற்கனவே உள்ள தொழில்வரியில் கீழ்கண்ட அட்டவணை படி உயர்வு செய்யப்படும். இது தொடர்பாக வந்தவாசி நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், மன்ற தீர்மான எண்.082, நாள்.31.05.2018ல் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை

| வ.எண். | சுராசரி ஆண்டு வருமானம் ரூ. | 01.10.2014 முதல் அமலில் ஏற்கனவே உள்ள தொழில்வரி ரூ. | 01.10.2018 முதல் நிர்ணயம் செய்யப்பட வேண்டிய தொழில்வரி ரூ. |
|---|---|---|---|
| 1. | ரூ.21,000—வரை | ஏதுஇல்லை | ஏதுமில்லை |
| 2. | ரூ.21,001 முதல் 30,000வரை | ரூ.118 | ரூ.148 |
| 3. | ரூ.30,001 முதல் 45,000 வரை | ரூ.294 | ரூ.368 |
| 4. | ரூ.45,001 முதல் 60,000வரை | ரூ.586 | ரூ.733 |
| 5. | ரூ60,001 முதல் 75,000வரை | ரூ.880 | ரூ.1100 |
| 6. | ரூ.75000/— க்கு மேல் | ரூ.1173 | ரூ.1250க்கு மிகாமல் |

இதன்படி 1920ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 124(டி) மேற்படி தொழில்வரி உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள விவரம் அறிவிப்பு செய்யப்படுகிறது. இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்கு பின்னர் தொழில்வரி உயர்வு செய்வது குறித்து இறுதி செய்யப்படும்.

எனவே மேற்குறிப்பிட்டுள்ள தொழில்வரி விதிப்பு குறித்து ஆட்சேபணைகள் ஏதும் இருப்பின் அதனை குறிப்பிட்ட நாட்களுக்குள் எழுத்து மூலமாக ஆணையர், வந்தவாசி நகராட்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

01.10.2018 முதல் தொழில்வரி சீராய்வு செய்ய 25% சதவீதத்திற்கு குறையாமலும் 35% சதவீதத்திற்கு மிகாமலும் தொழில்வரி சீராய்வு செய்ய மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண். 847/2018/அ1, நாள். 25.05.2018 )

தீர்மானம் எண்.082ல் 25% சதவீதத்திற்கு உயர்வு செய்ய மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம்** (அனுமதிக்கப்பட்டது ).

**082A**.வந்தவாசி நகராட்சி வார்டு எண்.1,4 மற்றும் **6** பகுதிகளில் உள்ள சமுதாய கழிப்பிடங்கள் பழுது பார்க்கும் பணிக்கு **09.05.2018** ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

1.திரு.P.இளங்கோ, ஒப்பந்ததாரர் – 0.38% மதிப்பீட்டைவிட குறைவு
2.திரு.தர்மதுரை, ஒப்பந்ததாரர் – 0.20% மதிப்பீட்டைவிட குறைவு
3.திரு.E.மஜீத், ஒப்பந்ததாரர் –71.02% மதிப்பீட்டைவிட கூடுதல்

மேற்படி பெறப்பட்டுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.38% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.P.இளங்கோ ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1.வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. P.இளங்கோ ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2.பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலர் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.025/2018/இ1)

**தீர்மானம்** **(அனுமதிக்கப்பட்டது ).**

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
வந்தவாசி நகராட்சி